பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 03 | புதன்கிழமை | 17.01.2024 | அதிர்வு 169

## புதுக்குடியிருப்பில் பெண்ணின் சடலம்



முல்லைத்தீவு,புதுக் குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவி புரம் – முள்ளுக்காடு வயல் வெளிப்பகுதி யில் இருந்து 06



# சஜித் அணிக்குள் வெடித்தது பூகம்பம்

## கபீர், ஹர்ஷ, எரான் கடும் அதிருப்தி

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட அரசியல்வாதிகள் சிலர் கடும் அதிருப்தி நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸவை வளர்த்தெடுப்பதி லும், கட்சியின் பொருளாதாரக் கொள்கைககளை வகுப்பதிலும் இதுகால வரையும் முன்னணியில் நின்ற கபீர் ஹாசிம், கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன போன்றோர் முக்கிய பங்களித்துள்ளனர். 06

## அரசுடன் சுகாதாரத்துறையினர் நேற்று நடத்திய பேச்சு தோல்வி



அரசுடன்நடத்தப்பட்டபேச்சுதோல்வி யில் முடிவடைந்த நிலையில் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் இன்று காலை 06.30 மணிவரை தொடரும் என்று சுகாதாரத்துறை தொழிற்சங் கங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுக் காலை முதல் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சுகா தாரத்துறை தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், 06

## மற்றுமொரு பல்கலை மாணவி டெங்கால் பரிதாப உயிரிழப்பு

### 15 நாள்களில் மட்டும் 5,428 பேர் பாதிப்பு



டெங்குநோயால்பாதிக்கப்பட்டுஹொரனை வைத்தியசாலையில் சிகிச்சை 06

## விவசாய விஞ்ஞான பாடத்தின் இரு வினாத்தாள்களும் இரத்து!

### பெப்ரவரி முதலாம் திகதி புதிய பரீட்சை




ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விவ சாய விஞ்ஞான பாடத்திட்டம் தொடர் பான இரண்டு வினாத்தாள்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள இலங்கை பரீட்சை கள்திணைக்களம், மேற்படி பரீட்சைக் கான புதிய திகதியையும் அறிவித் துள்ளது. 06




கூட்டுக்குள் குழப்பம்.

தென்னிலங்கையில் கட்சி மாறுபவர்களை அரவணைப்பதால் கட் சிகளுக்குள் பெரும் பிரச் சினை.

பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேம தாஸ மொட்டுக்கட்சி மூலம் நாடாளுமன் றுக்கு வந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கலாநிதி நாலக கொடஹேவா போன் றோரை தமது அணியில் 06



# இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த 18 இந்திய மீனவர்கள் கைது!



**(ந.லோகதயாளன்)**

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 18 இந்திய மீனவர்கள் நேற்றும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டம், பேசாலையை அண்மித்த கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு தலைமன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

கைதான 18 மீனவர்களும் மீன்பிடிக்கப் பயன்படுத்திய இரண்டு ட்ரோலர் படகுகளும் கடற்படையினரால் தலைமன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டுவரப்பட்டன.

அதன்பின்னர் 18 மீனவர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் இன்று மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.







# அரசியல் கட்சிகளுக்கு நிதி கிடைக்கும் விதம் தொடர்பில் விசாரிக்க வேண்டும்!

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு



**“அரசியல் கட்சிகளுக்கு பணம் கிடைக்கும் விதம், அவர்களின் பின்புலத்தில் உள்ள தரப்பினர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.”**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன நேற்று தெரிவித்தார்.**

**ஜனாதிபதி ஊடகப் பிரிவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இலங்கையைப் போன்று சுமார் 75 அரசியல் கட்சிகள் இருக்கும் நாடு உலகில் வேறு எங்கும் இல்லை. அதனால் நம் நாட்டில் பிளவுகள் உருவாகியுள்ளன. இது நாட்டில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டில் பல அழிவுகளுக்கும் வழிவகுத்தது. இந்த கட்சிகளுக்கு எப்படி பணம் கிடைக்கிறது? யார் செலவு செய்கிறார்கள் என்பதை கண்காணிக்க எந்த முறைமையும் இல்லை. எனவே இந்தக் கட்சிகள் எவ்வாறு தேர்தலில் பணத்தை செலவிடுகின்றன என்பதை கண்டறியக் கூடிய சட்டமூலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளார். அதற்குக் காரணம், அதல பாதாளத்திற்குச் சென்ற நாட்டை சுமார் ஒரு வருடமும் ஆறு மாதங்களில் மீண்டும் அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு சென்றமையால் ஆகும். ஜனாதிபதி ஒவ்வொரு வெளிநாட்டு பயணத்தையும் அந்த நோக்கத்திற்காக திறம்பட பயன்படுத்தினார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அத்துடன் 2020 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட எமது கட்சியின் விஞ்ஞாபனம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும். அப்படியானால், அவர்கள் தோற்கடித்த விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எரிபொருள், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடின்றி அனுபவிக்கின்றார்கள் என்பதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். அந்த ஆவணத்தால் தான் இன்று நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

டோக்கியோ மாநாட்டில் அன்று நாம் முன்வைத்த “யழி புபுதமு ஸ்ரீலங்கா” (இலங்கையை மீண்டும் மீட்டெடுப்போம்) என்ற நூலில் உள்ள விடயங்களை அரசாங்கம் இன்று நடைமுறைப்படுத்துகின்றது. இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளும் அதனைப் படிக்க வேண்டும்.

இனி ஒருவரையொருவர் விமர்சிப்பதில் அர்த்தமில்லை. வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை தவிர வேறு மாற்று வழியில்லை. அந்தத் திட்டத்தால் இன்று மக்கள் வரிசையில் நிற்காமல் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். எனவே, இதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். இந்தப் பயணத்தை யாரேனும் மாற்றினால் அதற்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும். அரசியல் இலாபங்களுக்காக சில சந்தர்ப்பங்களில் வெளியிடப்பட்ட சில பொய்யான அறிக்கைகளுக்கு அதனை முன்வைத்த அந்தக் கட்சிகளே பொறுப்பேற்க வேண்டும்.

2022ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற போது, இந்த நாட்டில் அரசியல் செய்யும் திறமை எவருக்கும் இருக்கவில்லை. எந்த ஒரு அபிவிருத்திப் பணியையும் செய்ய யாருக்கும் பலம் இல்லை. மூன்று வருடங்களாக தடைப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்க முடிந்துள்ளது.

ஆனால் சில கட்சிகள் இந்த நாட்டின் அபிவிருத்திப் போக்கை சீர்குலைக்க முயற்சிக்கின்றன. அந்த குழுவினர் இந்த நாள்களில் வேலைநிறுத்த அலைகளை ஆரம்பித்துள்ளனர். இதை உலகம் முழுவதும் பரப்பி, இங்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை குறைக்க முயற்சி செய்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க முயற்சிக்கலாம். அதன் மூலம் எமது நாட்டுக்கு பல பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

மேலும், கடன் மறுசீரமைப்புக்காக, ஜப்பான் மற்றும் பாரிஸ் கிளப்புடன் ஓர் ஒப்பந்தமும், சீனாவுடன் மற்றொரு ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட உள்ளன. அதன் மூலம், பெப்ரவரி மாதத்திற்குப் பிறகு, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெய்கா நிறுவனம் மற்றும் நட்பு நாடுகளின் ஆதரவுடன் நாட்டை முன்னேற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படும். அதை சீர்குலைக்க சில கட்சிகள் முயற்சி செய்யலாம். இவ்வாறான முயற்சிகளை இனங்கண்டு முறியடிக்க வேண்டியது மக்களின் பொறுப்பு” –என்றார்.





# கரட் விலை 2,000 ரூபா வரை உயர்வு

கரட் ஒரு கிலோகிராமின் சில்லறை விலை 2,000 ரூபா வரை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது வரலாற்றில் கரட் ஒரு கிலோகிராமுக்கு பதிவான அதிகூடிய விலையென அதன் தலைவர் ரோஹண பண்டார குறிப்பிட்டுள்ளார்.

கரட் ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 1,700 ரூபா அளவில் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் லீக்ஸ் ஒரு கிலோகிராம் 450 - 500 ரூபா அளவிலும், போஞ்சி ஒரு கிலோகிராம் 1,000 ரூபாவாக வும், பச்சை மிளகாய் ஒரு கிலோகிராம் 800 ரூபாவாகவும் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்,

அதிக மழையுடனான வானிலையினால் பயிர்ச்செய் கைகள் அழிவடைந்தமையே இதற்கான காரணமென அகில இலங்கை பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் ரோஹண பண்டார தெரிவித்துள்ளார்.

இன்னும் ஓரிரு வாரங்களில் இந்த விலைகள் குறைவ டையலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.






# முன்னாள் சிரேஷ்ட டி.ஐ.ஜியான லலித் ஜயசிங்கவுக்குப் பிணை!



முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி.) லலித் ஜயசிங்கவிற்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தினால் நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்னவினால் இந்த பிணை அனுமதி பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கஹவத்தை பகுதியில் 2015 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொருவர் காயமடைந்தார். இந்த சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்கு அழுத்தம் விடுத்த குற்றச்சாட்டின் கீழ் லலித் ஜயசிங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த குற்றம் தொடர்பில் அப்போதைய பிரதியமைச்சராக இருந்த பிரேமலால் ஜயசேகரவை கைது செய்ய தயாராகிய போது, அதனை தடுத்து பொலிஸாருக்கு அழுத்தம் கொடுத்தார் என முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

# பொலிஸ் சுற்றிவளைப்பில் 297 சந்தேகநபர்கள் கைது



கடந்த 24 மணித்தியாலங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில்

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 297 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்பிரிவில் பட்டியலிடப்பட்டிருந்த 42 ஆயிரத்து 248 பேரில், 297 சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் போதைப்பொருள் தொடர்பில் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 130 பேரும் அடங்குகின்றனர்.

ஏனைய குற்றங்கள் தொடர்பில் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 154 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைரேகை பதிவுகளின் மூலம் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் குற்றங்களுடன் தொடர்புடைய 9 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வரும் 42 ஆயிரத்து 248 சந்தேகநபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் அண்மையில் உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்த்துக் கொண்டுள்ளார்.

இந்த வரிசையில் பேராசிரியர் சன்ன ஜயசுமணவும் சஜித் பக்கம் விரைவில் சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இணைப்பு ஐக்கிய மக்கள் சக்திக்குள் பூகம்பத்தை கிளப்பி உள்ளது. மேற்படி மூவரும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, அவரது ஆட்சிக் காலத்தில் 'கயிறு' கொடுத்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

கோட்டாபயவை பொருளாதார துறையில் தவறாக வழிநடத்தியவர் கலாநிதி நாலக கொடஹேவா எனக் கருதப்படுகின்றது.

அவரைக் கட்சிக்குள் உள்வாங்குவதை இதுவரை ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித்துக்கு ஆதரவாக பொருளாதார விடயங்களை எடுத்துரைத்துப் பிரசாரப்படுத்தி வந்த கலாநிதி ஹர்ஷா டி சில்வா, இரான் விக்ரமரத்ன, மற்றும் கபீர் ஹாசிம் போன்றோர் கடுமையாக எதிர்கின்றனர்.

கொவிட் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை புதைக்கும் படியான தீவிர நிலைப்பாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்தமைக்கு பின்னால் இருந்த முக்கிய சூத்திரதாரி சன்ன ஜயசுமண என்று கூறப்படுகின்றது. அவரை ஐக்கிய மக்கள் சக்தி அணியின் கூட்டணிக்குள் உள்வாங்குவதை அந்தக் கூட்டணியில் உள்ள ரவூப் ஹக்கீம், றிஷாட் பதியுதீன் ஆகியோரின் கட்சிகளும் ஏனைய முஸ்லிம் கட்சியினரும் கடுமையாக எதிர்க்கின்றனர் எனத் தகவல்.

அதே சமயம் ஐக்கிய மக்கள் சக்தி தரப்பிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆளுதரப்புக்கு குத்துக்கரணம் அடித்துள்ள வடிவேல் சுரேஸுக்கு அரசுத்தரப்புக்குள் முக்கியத்துவம் கொடுக்கின்றமை ஏற்கனவே ஜனாதிபதி ரணிலுக்கு முண்டு கொடுத்து நிற்கும் மொட்டு கட்சியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

அதே சமயம் சுதந்திரக் கட்சியில் இருந்து ரணில் தரப்புக்கு மாறியுள்ள சம்பத் திசநாயக்காவுக்கும் ஆளும் தரப்புக்குள் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவற்றினால் அதிருப்தி அடைந்துள்ள பதுளை மாவட்டத்தின், மொட்டுக் கட்சி பிரதிநிதியான நகர அபிவிருத்தி, வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் தேனுகா விதான கமகே சீற்றத்தில் ஆழ்த்தி இருப்பதாக கூறப்படுகிறது. அதனால் அவர் விரைவில் எதிர்க்கட்சிகள் பக்கம் போய் இருப்பார்கள் என்று விடய மறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## விவசாய விஞ்ஞான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த ஜனவரி 10 ஆம் திகதி நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞான பாடத்துக்கான இரண்டாம் வினாத்தாளை பரீட்சைகள் திணைக்களம் இரத்துச் செய்வதாக 12 ஆம் திகதி அன்று அறிவித்திருந்தது.

குறித்த வினாத்தாளின் சில வினாக்கள் பரீட்சைக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பப்பட்டன என்று வெளியான தகவலை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்திருந்தார்.

அதற்கமைய, விவசாய விஞ்ஞான பாடத்துக்கான இரண்டாம் வினாத்தாள் பரீட்சையை மீண்டும் நடத்த பரீட்சைகள் திணைக்களம் முடிவு செய்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆசிரியர் ஒருவரும், அலுவலக உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணைகளில் விவசாய விஞ்ஞான பாடத்தின் முதலாம் வினாத்தாளில் இருந்தும் பல கேள்விகள் கசிந்துள்ளமை தற்போது தெரியவந்துள்ளது என்று இலங்கை பரீட்சைகள் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிணங்க, இரண்டு வினாத்தாள்களும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு புதிய பரீட்சை திகதியும் நேரமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, விவசாய விஞ்ஞான பாடத்துக்கான இரண்டாம் வினாத்தாள் பரீட்சை எதிர்வரும் பெப்வரி 01 ஆம் திகதி காலை 08.30 மணி தொடக்கம் முற்பகல் 11.40 மணிவரை நடைபெறும்.

விவசாய விஞ்ஞான பாடத்துக்கான முதலாம் வினாத்தாள் பரீட்சை அன்றைய தினம் பிற்பகல் 01.00 மணி தொடக்கம் பிற்பகல் 03.00 மணி வரை நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கான பாடசாலை விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டை அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அதேவேளை, தனியார் விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்படும் என்றும் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த மார்கண்டு பாக்கியம் என்பவரே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது உயிரிழப்பு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மேலதிக விசாரணைகளைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மற்றொரு பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்று வந்த பல்கலைக்கழக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவியான 23 வயதான ஹசினி பாக்யா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்றுக் காலை அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, 2024 ஜனவரி மாதம் முதல் 15 நாட்களில் மாத்திரம் 5 ஆயிரத்து 428 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 1,122 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பை அடுத்ததாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 1076 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## சஜித் அணிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண கட்சியின் அதிருப்தியாளர்கள் குழுவில் இருந்த ஜீ.எல்.பீரிஸ், நாலக கொடஹேவா போன்றோர் அண்மைக்காலமாக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அரசியல் செயற்பாடுகளின்போது ஜீ.எல். பீரிஸ் மற்றும் பொருளாதார விவகாரங்களில் கலாநிதி நாலக கொடஹேவா போன்றோரின் ஆலோசனைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் வகையில் சஜித் பிரேமதாஸவிடம் அவர்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளனர்.

அதன் காரணமாக கபீர் ஹாசிம், கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன உள்ளிட்ட முக்கிய அரசியல்வாதிகள் பலரும் கடும் அதிருப்திக்கு உள்ளாகி இருக்கின்றனர் என்று கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்களை இணைத்துக் கொண்டு அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்குப் பதில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதே கட்சியின் எதிர்கால நலனுக்கு நன்மை பயக்கும் என்று பலரும் பகிரங்கமாக விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

## அரசுடன் சுகாதாரத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண ஆகியோருடன் தமது கோரிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பேச்சு தோல்வியடைந்ததால் இன்று காலை 6.30 மணி வரை பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்று தெரிவித்தனர்.

வைத்தியர்கள் நீங்கலாக 72 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் நேற்று காலை 06.30 மணிக்கு 24 மணி நேர வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

வைத்தியர்களுக்கான சேவைக்கால இடையூறு, வருகை மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவை 35,000 ரூபாவால் அதிகரிக்கவுள்ளதாக நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அண்மையில் அமைச்சரவைக்கு அறிவித்திருந்தார்.

இந்தத் தீர்மானத்துக்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், குறித்த கொடுப்பனவு தமக்கும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி பல சுகாதார தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சுக்களை முன்னெடுக்க தீர்மானம்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தகவல்

வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவை ஏனைய சுகாதார ஊழியர்களுக்கும் வழங்குவது தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சுக்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறைசார் தொழிற்சங்கங்கள் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண ஆகியோருக்கிடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை சகல சுகாதாரத்துறை சார் தொழிலாளர்களுக்கும் வழங்குமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை செவிமடுத்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, நிதி அமைச்சுடன் இது தொடர்பில் விசேட பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாகவும் அதில் சுகாதார தொழிற்சங்க பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய நிதி அமைச்சுடனான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

சுகாதார நிபுணர்களின் தொழில் கௌரவத்தைப் பாதுகாத்து அவர்களின் தொழில்சார் உரிமைகளை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தொடர்ந்து செயற்பட்டு வருவதாகவும், இந்த நாட்டில் இலவச சுகாதார சேவை சிறந்த மட்டத்தில் இருப்பதாகவும், சர்வதேச ரீதியாகவும் பாராட்டுகளைப் பெறுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இதற்கு பங்களிக்கும் சுகாதார நிபுணர்களுக்கு அனைத்து மரியாதைகளும் வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதன் போது குறிப்பிட்டுள்ளார்.



# அக்மீமன பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் கைது

அக்மீமன பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் அந்தவத்த காம் கானம்கே சுகத் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு அழுத்தம் விடுத்த குற்றச்சாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொத்தல பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அருகில் கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் ஒருவர், மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிட முற்பட்ட போது, சந்தேகநபர் அந்த அதிகாரிக்கு அழுத்தம் விடுத்தார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட அக்மீமன பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர், யுக்திய சுற்றிவளைப்பின் போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் காலி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புலம்பெயர் பங்காளிகள்

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரம் கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாக இழுபடுகின்றது.

அதிலும் கடந்த ஒன்றரை தசாப்த காலம் சற்று வித்தியாசமானது.

தமிழர்களின் உரிமைகளுக்கான ஆயுதப் போராட்டம் 2009 இல் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அச்சமயத்தில் அரசியலில் இருந்த தமிழ் தலைவர்களும், அவர்களால் பிற்காலத்தில் அரசியலுக்குக் கொண்டவரப்பட்டவர்களும், கடந்த 15 ஆண்டுகளில் உருப்படியாக எதுவும் செய்யவே இல்லை என்ற ஆதங்கம் - அதிருப்தி - எரிச்சல் - தமிழ் மக்களுக்கு.

அது மாத்திரமல்ல, அந்த தமிழ்த் தலைவர்கள் இன்னொரு விடயத்தையும் புறமொதுக்கி வருகின்றனர். அது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

இலங்கையில் இனப் பிரச்சினையில் சிக்கி, தீர்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களில் கணிசமானோர் - முக்கிய பங்காளிகள் - புலம்பெயர்ந்த தமிழர்கள்.

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையில் மிக முக்கிய பங்குதாரர்கள் அவர்கள் என்ற யதார்த்தத்தை உள்நாட்டில் செயற்படும் நமது தமிழ்த் தலைவர்கள் உணர்ந்து ஏற்றுக் கொள்பவர்களாக இல்லை. அவர்கள் புலம்பெயர்ந்து விட்டவர்கள், தேசிய இனப்பிரச்சினையில் அவர்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்ட தரப்பல்ல என்று நினைக்கின்றார்கள்.

இதுவரை, கடந்த ஒன்றரை கசாப்த காலமாகத் தமிழர் தேசிய தரப்புகளுக்குத் தலைவராகத் தன்னைக் காட்டிக் கொண்ட சம்பந்தன் கூட புலம்பெயர் தமிழர்களை இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்பட்ட தரப்பு என்றோ, பிரதான பங்காளர்கள் என்றோ ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களை இப்பிரச்சினையில் பார்வையாளர்கள், முன்னாள் பங்காளிகள் என்ற அந்தஸ்தில் வைத்துக்கொண்டு, தீர்வு முயற்சிகளில் எங்களுக்கு அவர்கள் சொல்லித்தரத் தேவையில்லை என்ற மேலாதிக்க போக்கிலேயே அணுகினர் என்பது வெளிப்படையான உண்மை.

ஆனால் அந்த அணுகுமுறை தவறானது. அவர்கள் புலம்பெயர்ந்து சென்றவர்கள் என்றாலும், தமிழர் தாயகத்தின் பிரதான பங்காளிகள். இனப் பிரச்சினையின் ஆழமான, கொடூரப் பக்கங்களே அவர்களை இலங்கை தீவில் இருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் பூகோளப் பந்தின் பல்வேறு தேசங்களுக்கும் தூக்கிவீசியது. அவர்கள்பல்லாயிரம்மைல்களுக்கு அப்பால் வசித்தாலும், எண்ணத்தினாலும் நினைவினாலும், செயல்களினாலும் சதா தமது தாயகத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்கள். அந்தச் சிந்தனையில் உழன்று கொண்டிருப்பவர்கள்.

ஈழத்தில் யுத்தம் நடந்த காலத்தில், இலங்கை அரசின் யுத்த பட்ஜெட்டுகளுக்கு நிகரான பாதீடுகளை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சக்திகளான விடுதலைப் புலிகளும் முன்னெடுத்தார்கள் என்றால் அதற்குப் பிரதான காரணகர்த்தாக்கள் இந்தப் புலம்பெயர் தேசத்தவர்கள் என்ற நமது உறவுகள்தான்.

நல்லிணக்கத்தில் முதல் அங்கம் இடம்பெயர்ந்தோர் தத்தமது பூர்வீக இடங்களுக்கு மீளுவதாகும். அது உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தோருக்கும் பொருந்தும்.

ஆகவே எந்தத் தீர்வும் - எந்த இணக்கமும் - புலம்பெயர்ந்தோர் தாமாக விரும்பி நாடு திரும்புவதற்கான உகந்த சூழலையும் உறுதிப்பாட்டையும் கொண்டிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

ஆகவே எட்டப்படும் எந்தத் தீர்விலும் அவர்களும் சம பங்காளிகளாகவும், உரித்துக்காரர்களாகவும் இருக்க வேண்டும். அது கட்டாயம்.

தலைவர் பிரபாகரனின் கடைசி மாவீரர் தின உரை 2008இல் நிகழ்த்தப்பட்டது. அந்த உரையில், இந்த விடுதலைப் போராட்டத்தின் முக்கிய பொறுப்புகளை புலம்பெயர்ந்த நமது மக்களின் இளம் சமுதாயம் பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் தீர்க்கதரிசனமாக எடுத்துரைத்திருந்தார். அந்தப் புலம்பெயர் இளைஞர் சமுதாயம் இந்த 15 ஆண்டுகளில் புலம்பெயர்ந்தோரின் பொறுப்பான தலைமுறையாக உயர்ந்துள்ளது.

எனவே தமிழர் தரப்பில் - தமிழ்த் தேசிய தரப்பில் - தேசிய இனப் பிரச்சினைக்கான முயற்சிகளில் ஈடுபடுவோர், புலம்பெயர் சமூகத்தினர் இந்த விடயத்தில் புறமொதுக்கப்பட முடியாத - சமதையான - பங்காளிகள் என்ற யதார்த்தப் புற உண்மையை ஏற்றுக்கொண்டு, அவர்களையும் ஒரு தரப்பாக ஒன்றிணைத்து, முன்நகர முயற்சிக்க வேண்டும்.

களத்தில் தமிழ் தலைமைகள் பிளவுபட்டு நிற்பது போல, புலத்திலும், புலம்பெயர்ந்த இடங்களிலும் அங்குள்ள நமது தலைமைகள் பிளவு பட்டிருக்கலாம். பிளவுபட்டிருக்கின்றார்கள். அதைக் காரணம் காட்டி நாங்கள் அவர்களை விலத்தி, புறமொதுக்கி நடக்க முடியாது. நடக்கக் கூடாது.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில், உள்நாட்டு தமிழர்கள் போல புலம்பெயர் தமிழர்களும் சரிசமன் பங்காளிகள். இதைப் புறமொதுக்கி நாம் நடக்க முடியாது. நடக்கக் கூடாது.

சம்பந்தன் உள்ளிட்ட தலைவர்கள் இந்த யதார்த்தப் புற உண்மையை புறமொதுக்கி நடந்த தங்கள் தப்பை உணர்ந்து திருத்திக் கொள்ள வேண்டும்.



# கச்சதீவு உற்சவ முன்னேற்பாடு அதிகாரிகள் நேற்றுப் பயணம்





(ந.லோகதயாளன்)


கச்சதீவு புனித அந்தோனியார் உற்சவம் தொடர்பான முன் ஆயத்தப் பணிக்காக மாவட்டச் செயலகப் பிரதி நிதிகள் மற்றும் பங்குத் தந்தை ஆகியோர் கச்சதீவிற்கு நேரில் சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான உற்சவத்தை பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி நடத்தத் திட்டமிடும் நிலையிலேயே இந்த ஆயத்தப் பயணம் நேற்று இடம்பெற்றது.

யாழ்.மாவட்டமேலதிகஅரசஅதிபர், நெடுந்தீவு பிரதேச செயலாளர், பங்குந் தந்தை ஆகியோருடன் கடற்படையினரும் நேற்று அங்கு பயணித்துள்ளனர்.

உற்சவத்தின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் திணைக்களங்களின் வகி பாகம் தொடர்பில் எதிர்வரும் வாரம் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது. அந்தத் திட்டமிடலுக்குத் தேவையான தரவுகளை சேகரிக்கும் வகையிலேயே இப் பயணம் அமைந்துள்ளது.







# பாலமேடு ஜல்லிக்கட்டுப் போட்டி: சிறந்த வீரர் பிரபாகரனுக்கு கார் பரிசு





புகழ்பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டுப் போட்டி நேற்று கோலாகலமாக நடைபெற்றது. இப்போட்டியில் 14 காளைகளை அடக்கிய மாடுபிடி வீரர் பிரபாகரனுக்கு முதல் பரிசாக கார் வழங்கப்பட்டது. சிறந்த காளையாக புதுக்கோட்டை மாவட்டம் ராயவயல் பகுதியைச் சேர்ந்த மருதுபாண்டி என்பவரின் ஹசின் னக் கருப்பு" என்ற காளை தேர்ந் தெடுக் கப்பட்டது.

காளையின் உரிமையாளருக்கு முதல் பரிசாக கார் வழங்கப்பட்டது. இந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் 49 பேர் காயம் அடைந்தனர்.

தைப் பொங்கலையொட்டி ஆண்டு தோறும் மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் நடக் கும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலகப் புகழ்பெற்றவை. இதில், பாலமேட்டில் செநேற்று ஜல்லிக்கட்டுப் போட்டி கோலாகலமாக நடைபெற்றது. பாலமேடு மஞ்சமலை ஆற்றுத்திடலில் அமைக்கப்பட்ட வாடிவாசலில் தமிழக அரசும், பாலமேடு கிராமப் பொது மகாலிங்க மடத்துக் குழுவும் இணைந்து இந்தப் போட்டியை நடத்தின.

மதுரை மட்டுமில்லாது தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் உள்பட தமிழகம் முழுவதும் உள்ள சிறந்த காளைகள் இந்தப் போட்டியில் பங்கேற்றன. போட்டியில் பங்கேற்க 3,677 காளைகளும் 1,412 மாடு பிடி வீரர்களும் ஒன்லைனில் பதிவு செய்திருந்தனர்.

அதில், 1000 காளை களும், 600 மாடுபிடி வீரர்களும் தேர்வு செய்யப் பட்டனர். காலை 7 மணியளவில் மாவட்ட ஆட்சியர் சங்கீதா தலைமையில் மாடு பிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றனர்.

அதன் பிறகு போட்டியை வணிக வரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி கொடியசைத்துப் போட்டியைத் தொடங்கி வைத்தார். சோழவந்தான் எம்.எல்.ஏ. வெங்கடேசன், மடத்து குழுத் தலைவர் மலைச்சாமி, செயலாளர் பிரபு, பொருளாளர் ஜோதி தங்கமணி மற்றும் நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் ராஜ்குமார் தலைமையில் 3 உதவி இயக்குநர்கள், 16 கால்நடை ஆய்வாளர்கள், 16 கால்நடை உதவி யாளர்கள் தலைமையிலான குழுவினர் மாடுகளைப் பரிசோதனை செய்தனர். அவர்கள் பரிசோதனை செய்த பிறகே காளைகள் வாடிவாசலில் இருந்து அவிழ்க்கப்பட்டன. முதலில் பாலமேடு கிராமப் பொது மகாலிங்க மடத்துக் காளை உட்பட பல்வேறு கோயில் காளைகள் வாடிவாசலில் இருந்து அவிழ்த்துவிடப்பட்டன. அதன்பிறகு மாடுபிடி வீரர்கள் அடக்குவதற்காக ஒன்றன் பின் ஒன்றாக காளைகள் அவிழ்த்துவிடப்பட்டன.

மொத்தம் 10 சுற்றுகள் நடந்த போட்டியில் 14 காளைகளை அடக்கி மதுரை மாவட்டம் பொதும்பு கிராமத்தைச் சேர்ந்த பிரபாகர் சிறந்த மாடுபிடி வீரராகத் தேர்வானார். இவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில் அமைச்சர் பி.மூர்த்தி கார் பரிசு வழங்கினார். 11 காளைகளை அடக்கிய அலங்காநல் லூர் அருகே சின்னப்பட்டி தமிழரசனுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது.

பாலமேடு ஜல்லிக்கட்டுப் போட்டி யின்போது, பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 2 பொலிஸார், 20 மாடுபிடி வீரர்கள், 15 மாடு உரிமையாளர்கள், 12 பார்வையாளர்கள் என 49 பேர் காயமடைந்தனர்.

# விமானியை தாக்கிய பயணியால் பரபரப்பு!



டில்லி விமானத்தில் பயணித்த பயணி யொருவர் விமானியை தாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டில்லியில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக 110 விமானங்கள் தாமதமாக புறப்பட்ட நிலையில், 79 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

இந்த நிலையில், டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திலிருந்து கோவா செல்லவிருந்த விமானமும் தாமதமாக புறப்பட்டது.

இது குறித்த அறிவிப்பை வெளி யிட வந்த விமானியை பயணி ஒருவர் தாக்கியுள்ளமை பரபரப்பை ஏற்படுத் தியது.

இதனை விமானத்தில் இருந்த சக பயணியொருவர் காணொளி எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட அந்த காணொளி பேசுபொருளாகியுள்ளது.

மேலும், விமானத்திலிருந்து அந்த பயணி வெளியேற்றப்பட்டு அதிகாரி களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்: குடியரசுக் கட்சி வேட்பாளர் தெரிவில் டொனால்ட் ட்ரம்ப் முன்னிலை




2024 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரை தெரிவு செய்யும் தேர்தல் நடைபெற்று வருகிறது.

இதில் அயோவா மாகாணத்தில் நடைபெற்ற வாக்குப்பதிவில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார்.

தற்போதுள்ள ஜனாதிபதியின் பதவிக்காலம் இவ்வாண்டுடன் நிறைவடைவதால், எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டும். அதற்கு மாகாணங்கள் தோறும் வாக்குப்பதிவு நடைபெறும்.

பிரதானமாகவுள்ள இரண்டு கட்சிகள் சார்பிலும் நடக்கும் மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுப்பார்கள்.

அந்த வகையில், குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு நடைபெற்று வருகிறது. முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், இந்திய வம்சாவளியை சேர்ந்தவரும், தெற்கு கரோலினா மாகாண முன்னாள் ஆளுநருமான நிக்கி ஹேலி, தொழிலதிபர் விவேக் ராமசாமி உள்ளிட்டோர் களத்தில் உள்ளனர்.

இதில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அயோவா மாகாண தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

அயோவா தேர்தலில் 51.9 சதவீத வாக்குகளுடன் டொனால்ட் ட்ரம்ப் முன்னிலை வகிக்கிறார். ப்ளோரிடா ஆளுநர் ரான் டேசாண்டிஸ் 20.7 சதவீத வாக்குகளுடன் 2 ஆம் இடத்தில் இருக்கிறார்.

தெற்கு கரோலினா ஆளுநர் நிக்கி ஹேலி 19 வீத வாக்குகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார்.

விவேக் ராமசாமி 7.7 சதவீத வாக்குகளும், அர்கான்ஸஸ் முன்னாள் ஆளுநர் அஸா ஹட்ஷின்சன் 0.2 வீத வாக்குகளும் பெற்றுள்ளனர்.

# மொசாட் உளவு அலுவலகம் மீது ஈரான் தாக்குதல்: 4 பேர் உயிரிழப்பு

ஈரான் நடத்திய திடீர் தாக்குதலில் ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகள் அதிர்ச்சியடைந்துள்ளன.

ஈராக்கில் உள்ள இஸ்ரேலின் புகழ்பெற்ற உளவு அமைப்பான மொசாட் உளவு அமைப்பின் தலைமை அலுவலகத்தை குறிவைத்து ஈரான் தாக்குதலை நடத்தியுள்ள சம்பவம் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த உளவு அலுவலகம் குர்திஸ்தானின் அர்பில் பகுதியில் அமெரிக்க தூதரகக் கட்டடத்தின் அருகே உள்ளது.

இஸ்ரேல் நாட்டின் மொசாட் உளவு அமைப்பு ஈரானுக்கு எதிராக உளவுத் தகவல்களை சேகரிப்பதாக நீண்ட நாள் குற்றச்சாட்டு இருக்கிறது. இந்த நிலையில் மொசாட் உளவுத்துறை அலுவலகம் மீது ஈரான் நடத்தியுள்ள தாக்குதல் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து குர்தீஷ் பிராந்திய அரசு வெளியிட்ட அதிகாரபூர்வ அறிக்கையில்,



“ஈரான் தாக்குதலில் அப்பாவி பொதுமக்களில் 4 பேர் இறந்ததாகத் தெரிவித்துள்ளது. இவர்களில் பெஷ்ராய் தியாஷி என்ற உள்ளூர் தொழிலதிபரும் உயிரிழந்தார் என்று தெரிவித்துள்ளது. . தியாஷியின் அரண்மனை மீதே ஈரான் குண்டு விழுந்துள்ளது.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து ஈரானின் பாதுகாப்புப் படையான புரட்சிகர காவல் அமைப்புகள் வெளியிட்ட அதிகாரபூர்வ அறிவிப்பில்,

“சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள ஐ.எஸ். குழுக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினோம். ஈரானுக்கு எதிராக உளவு வேலைகளை செய்துவந்த இஸ்ரேலுக்குச் சொந்தமான மொசாட் உளவு அமைப்பின் தலைமையகத்தை தாக்கி அழித்தோம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இம்மாத தொடக்கத்தில் ஈரானில் நடந்த காசிம் சுலைமாணி நினைவேந்தல் நிகழ்வில் நடந்த குண்டு வெடிப்பில் 80 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.




# இமாலயப் பிரகடனத்திற்குப் பதிலாக ஆதரவை தமிழர்களின் சுயநிர்ணயத்திற்கு வழங்குங்கள்!

## சுவிஸ் ஜனாதிபதியிடம் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் கோரிக்கை!

(கி.வசந்தரூபன்)

இமாலயப் பிரகடனத்தை ஆதரிப்பதை விட, தமிழர்களின் சுயநிர்ணயத்திற்கு ஆதரவை வழங்குமாறு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் சுவிஸ் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தைபொங்கல் தினத்தை முன்னிட்டு இன்று அவர்களால் வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்னால் அமைந்துள்ள போராட்டத் தளத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க கொடிகளை ஏந்தியவாறும் பொது வாக்கெடுப்பே தமிழ் மக்களின் எதிர்காலம் எனப் பொறிக்கப்பட்ட பொங்கல் பானைகளை ஏந்தியவாறும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் அவர்க ஈடுபட்டனர்.

அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

“இமாலயப் பிரகடனம்“ என்ற காலாவதியான கருத்தையும் ஒற்றையாட்சியையும் ஊக்குவிப்பதை விட, பொதுவாக்கெடுப்பை ஆதரித்து, தமிழர்களுக்கு சுயநிர்ணயத்தை வழங்கவும் சுவிஸ் ஜனாதிபதி வயோலா அம்ஹெர்ட்டை நாங்கள் கடுமையாக ஊக்குவிக்கிறோம்.

இமாலயப் பிரகடனத்தில்பௌத்த குருமார்கள் பங்கேற்பதற்கு சுவிட்சர்லாந்து நிதியுதவி அளித்தது. அதற்கு நிதி உதவி வழங்குவதை நாம் எதிர்க்கிறோம். இந்தப் பிரகடனம் பன்மைத்துவ சமூகத்துடன் கூடிய ஒற்றையாட்சி அரசை உருவாக்க முயல்கிறது. இது சிங்கள சமூகத்திற்கு சாதகமாக அமையும்.

சுவிஸ் மற்றும் பிற அரசாங்கங்கள் செல்வாக்கு மிக்க தமிழ்க் குழுக்களை பலவீனப்படுத்துவதற்கு பங்களிக்கும் சில அரசசார்பற்ற நிறுவனங்களை ஆதரிக்கின்றன. இதன் விளைவாக, இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் போர்க்குற்றங்கள் மற்றும் தமிழர் அபிலாஷைகளுக்கான சர்வதேச நீதி பற்றிய விவாதங்களை மறைக்கின்றன.





நல்லிணக்கம் என்றழைக்கப்படுவதை நாங்கள் நம்பவில்லை. ஏனெனில் இது தமிழர்களின் நிலங்களை அபகரிக்கும் ஒரு மாறுவேட முயற்சியாகத் தெரிகிறது. அரசியல் தீர்வு காண்பதில் தமிழர்களில் எவரும் ரணிலையோ அல்லது எந்த சிங்களத் தலைவரையும் நம்புவதில்லை. கடந்த 75 வருடங்கள் இதற்கான தெளிவான சான்றுகளை வழங்குகின்றன.

இலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும், போரினால் இடம் பெயர்ந்த மக்களுக்கும் இடையே பொது வாக்கெடுப்பு நடத்த சுவிஸ் நாடானது வளங்களை ஒதுக்குமாறு அந்த ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறோம்.

சுவிட்சர்லாந்தின் ஜனாதிபதியாக நீங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் தலைமைப் பதவியை வகிக்கிறீர்கள். எனவே, வாக்கெடுப்பு என்பது நேரடி ஜனநாயகத்தின் ஒரு வடிவமாக இருப்பதால், நீங்கள் தமிழர் பிரச்சினையை ஆதரிப்பது மட்டுமல்லாமல், பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

செழுமையான தமிழ் கலாச்சாரத்தையும், அதன் அடையாளங்களையும், மொழியையும், வடக்கு கிழக்கில் உள்ள அவர்களின் பூர்வீக நிலங்களையும் அழிக்க முயலும் தமிழர் விரோத வேலைத்திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.



# மேய்ச்சல் தரை பண்ணையாளர்கள் அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு!



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)
மட்டக்களப்பு

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரையில் அத்துமீறிய விவசாய நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜே.ஜே.முரளிதரன் அவர்களிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

பண்ணையாளர்களின் கால்நடைகளை சுதந்திரமாக மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

மயிலத்தமடு, பெரிய மாதவணை கால்நடை கமநல அமைப்பின் தலைவர் நிமலன் தலைமையில் வருகை தந்த குழுவினர் இந்த மகஜரைக் கையளித்துள்ளனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், பொலிஸ் உயர் அதிகாரிகள், மதத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# நாடாளுமன்ற கூட்டத்தொடர் 24 ஆம் திகதியுடன் நிறைவு



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

அதற்கமைய, ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற கூட்டத்தொடரை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பான வர்த்தமானியை எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி வெளியிடுவார் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டவுடன் கோப் மற்றும் கோபா உள்ளிட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களின் பதவிக்காலங்களும் முடிவடையவுள்ளன.

அதற்கமைய நாடாளுமன்ற கூட்டத்தொடர் மீள ஆரம்பமான பின்னர் அந்த தெரிவுக்குழுக்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளன.




# தென்கிழக்குப் பல்கலையை வழமை நிலைக்கு கொண்டுவர உபவேந்தர், ஊழியர்கள் களத்தில்!

(எஸ்.அஷ்ரப்கான்,
ஏ.எம்.அஜாத்கான்)

சீரற்ற காலநிலை, மழை, வெள்ளம் மற்றும் நீர்த்தேகங்களின் வான்கதவுகள் திறப்பு காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் சில பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டமையுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளை மிகுந்த சிரமத்துடன் சுத்தப்படுத்தும் ஊழியர்களுடன் உபவேந்தர் உள்ளிட்ட குழுவினரும் இணைந்து சுத்திகரிக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

சீரற்ற காலநிலை மற்றும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் வெள்ளநீர் புகுந்ததன் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள அதேவேளை பல்கலைக்கழகத்துக்குள் அவசர நிலையை பிரகடனப்படுத்தி சகல தரப்பு ஊழியர்களின் ஒத்துழைப்புடன் வளாகத்தில் முழுமையாக சுத்திகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், அரபு மற்றும் இஸ்லாமிய பீடத்தின் பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, வேலைப்பகுதி பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸில் மற்றும் பேராசிரியர்கள், கல்விசாரா ஊழியர் சங்க தலைவர் எம்.ரீ.எம். தாஜ/தீன், செயலாளர் எம்.எம்.முஹம்மட் காமில் உள்ளிட்ட பலரும் இணைந்திருந்தனர்.

தற்போது பல்கலைக்கழகத்துக்குள் இருந்த வெள்ளம் வடிந்துள்ள நிலையில் தாழ்வான சில இடங்களில் தற்போதும் நீர் தங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பல்கலைக்கழகத்தின் சில பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும், தங்களுக்கு ஏற்கனவே அனர்த்த முகாமைத்துவ பிரிவினரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் காரணமாக பாரிய சொத்து இழப்புக்களை ஊழியர்களின் மேலான ஒத்துழைப்புடன் குறைக்க கூடியதாக இருந்ததாகவும் உபவேந்தர் குறிப்பிட்டார்.

மேலும், தங்களது சக்திக்கு மேலதிகமாக ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டால் கையாளவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் கருத்து வெளியிட்டார்.

அத்துடன், சேதங்கள், மீள் கட்டுமானம் மற்றும் எதிர்கால அனர்த்த தவிர்ப்பு திட்டவரைபவுகள் தொடர்பிலும் விரைவில் சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவுள்ளார் எனவும் சுத்திகரிப்பு பணிகளில் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார் எனவும் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

# மருந்து விநியோகப் பிரிவிற்கான பிரதி பணிப்பாளர்நாயகம் நியமனம்

சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகமாக வைத்தியர் ஜி.விஜேசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

வைத்தியர் ஜி.விஜேசூரிய நேற்று தமது கடமைகளை பொறுப்பேற்றார்.






# யாழ் நகரில் வழமை போல நேற்று பட்டிப் பொங்கலும் கோபவனியும்!

யாழ்ப்பாணத்தில் பட்டிப் பொங்கல் விழாவும் கோபவனியும் வழமை போல நேற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

தைப் பொங்கலுக்கு மறுநாள் பட்டிப் பொங்கல் உற்சவம் நடைபெறுவது வழமை.

இந்நிலையில் யாழ். நகரில் நேற்று நடைபெற்ற பட்டிப் பொங்கல் விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், தொழிலதிபர் ஈ.எஸ். பி. நாகரத்தினம் உள்ளிட்டவர்கள் பங்கேற்கனர்.
















# வடமாகாண தேசியத் தைப்பொங்கல் விழா ஆளுநர் தலைமையில் பூநகரி ஜெயபுரத்தில்

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் நடாத்தப்பட்ட மாகாணத் தைப்பொங்கல் விழா தமிழர் மரபுகளின் படி வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கலாசார முறைப்படி வடமாகாண ஆளுநர் தலைமையில் பூநகரி ஜெயபுரம் நெல் வயலில் நெல் அறுவடையும் அதன் பின்னர் அதனை சூரிய பகவானுக்கு அர்ப்பணித்துப் பொங்கல் பொங்கும் நிகழ்வு ஜெயபுரம் அம்மன் ஆலயத்திலும் நடைபெற்றது.

இதன் பின்னர் கலாசார கூறுகளுடன் கூடிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றமையுடன் ஆளுநர் உட்பட அழைக்கப்பட்ட அதிதிகளுக்கு கௌரவிப்பும் வழங்கப்பட்டது.



















# திருமலையிலும் மக்கள் பிரதிநிதித்துவத்தை ரெலோ பெறுவதற்குக் காலம் கனிந்துள்ளது

## அங்கு அலுவலகத்தைத் திறந்து வைத்து ஜனா நம்பிக்கை

(ஏ.எச். ஹஸ்பர்)

திருகோணமலையிலும் எமது மக்கள் பிரநிதிகளை தமிழீழ விடுதலை இயக்கம்(ரெலோ) பெறுவதற்கான காலம் கனிந்துள்ளது என அதன் செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனா கருணாகரம் பெருமிதத்தோடு தெரிவித்திருக்கின்றார்.

தைப்பொங்கல் தினமான நேற்று முன்தினம் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) திருகோணமலை மாவட்ட அலுவலகத்தை திருகோணமலை சுங்க வீதியிலுள்ள கட்டடத்தில் சம்பிரதாய பூர்வமாகவராலும், கட்சியின் உப தலைவர்களான முன்னால் மாகாணசபை உறுப்பினர் பிரசன்னா மற்றும் ஹென்றி மகேந்திரன் ஆகியோரால் கட்சி கொடியேற்றி திறத்து வைக்கப்பட்டது.



அதைத்தொடர்ந்து வருகை தந்திருந்த ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜனா கருணாகரம் மற்றும் உபதலைவர்களான நி.பிரசன்னா மற்றும் ஹென்றி மகேந்திரன் ஆகியோர் கட்சியின் திருகோணமலை மாவட்ட நிர்வாகத்தினரின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன எனவும், ஏனைய மாவட்ட நிர்வாகங்களின் செயற்பாடுகளைவிட ஒருபடி மேலாக கட்சியின் இம்மாவட்ட செயற்பாடுகள் இருக்கின்றன எனவும், தொடர்ந்து இவ்வாறே ஒற்றுமையாக செயற்படுவீர்களானால் இன்று மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பல பிரதேச சபைகளையும் பெற்ற நாங்கள் வருகின்ற தேர்தல்களில் எமது மக்கள் பிரநிதிகளை திருகோணமலையிலும் பெறுவதற்கான காலம் கனிந்துள்ள தாகவும் பாராட்டி பேசினார்கள்.

நிறைவாக மாவட்ட அமைப்பாளர் அ.விஜயகுமார் நன்றியுரை வழங்கினார்.

# கிண்ணியாவில் குப்பை மேட்டைத் தேடி வரும் யானைகளால் அருகில் குடியிருப்போர் அச்சம்




(ஏ.எச்.ஹஸ்பர்)

கிண்ணியா நகர சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகள் கிண்ணியா நகர சபைக்குட்பட்ட பாரதிபுரம் சின்னத் தோட்டம் பகுதியில் கொட்டப்படுவதனால் அந்தக்கழிவுகளை உண்ண வருகின்ற காட்டு யானைக அருகில் குடியிருப்பவர்களின் குடியிருப்புகளுக்கு வந்து தம்மையும் தமது தோட்ட பயிர்களையும் அழித்து விடும் என அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது இப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த யானை பாதுகாப்பு மின்சார வேலி கடந்த சில வருடங்களாக இயங்காததனால் குப்பை மேட்டுக்கு வருகின்ற யானைகள் வீடுகளுக்கு வந்திடும் என மக்க அச்சத்தில் தவிக்கின்றனர்.

ஏற்கனவே இந்த யானைக வீடுகளையும் விட்டுத் தோட்ட பயிர்களையும் அழித்துள்ளன என மக்கள் கூறுகின்றனர்.

இப்பொழுது மின்சார வேலி இல்லாதபடியினால் அவை மீண்டும் தமது குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தென்னை, வாழை ,மரவள்ளி முதலான பயிர்களை அவௌ அழித்து விடும் என அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதனால் மின்சார வேலியை அமைத்துத் தருமாறு அம்மக்கள் தெரிவிப்பதோடு தமக்கு பாதுகாப்பு தர வேண்டும் எனவும் கோருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.01.2024




இன்றைய செயல்களில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். அமைதியின்மை காரணமாக நீங்கள் கவனத்திலிருந்து விலக நேரலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது உணர்ச்சி வசப்படுவீர்கள். இத்தகைய போக்கை நீங்கள் தவிர்ப்பது நல்லது.

இன்று உங்கள் துணையுடனான உறவு சிறப்பாக இருக்காது. இருவரும் மகிழ்ச்சியாக இருக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி நிலைமையில் வளர்ச்சி காணப்படாது. குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய நேரும்.

இன்று உங்களிடம் அமைதியின்மை உணர்வு காணப்படும். இதனால் முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மகிழ்ச்சியாக இருக்க முயலுங்கள். இதனால் ஆரோக்கியமாக இருக்கலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்களின் அனுசரணையான தகவல் தொடர்பு திறமை காரணமாக நற்பலன்களைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் நல்ல முடிவை எடுக்கலாம். அது உங்களை முன்னேற்றும்.

உங்களுக்கு பணியில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு நன்மை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று பண வரவிற்கு சிறந்த நாள். உங்கள் சேமிப்பிற்காக போதிய அளவு பணம் ஒதுக்க உங்களால் இயலும்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். எனவே வெற்றிகரமான நாளாக அமையும். இன்று நன்கு சம்பாதிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் லாபகரமான செயல்களை செய்வீர்கள்.

உங்கள் பணி உங்களுக்கு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் பணியை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். அவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் தாயுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் பெற்றோருடனான உறவில் திருப்தி காணப்படும்.

இன்று நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் பணத்தை அனுபவித்து மகிழ்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று மந்தமான நாளாக இருக்கும். நீங்கள் இறை நாட்டம் கொண்டு பக்தியில் ஈடுபடுவீர்கள்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிகள் அதிகமாக காணப்படும் இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வது சிறந்தது. நல்ல புரிந்துணர்வின் மூலம் இருவரும் நெருக்கமாகலாம்.

இன்று ஆரோக்கியமான நிதி நிலைமை காணப்படாது. கூடுதல் செலவுகள் சந்திக்க நேரும். இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படாது. கால் வலி மற்றும் தோள் வலி போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில உணர்வுகள் உங்களிடம் காணப்படும்.

உங்களின் முயற்சிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறாத காரணத்தால் உங்கள் பணியைப் பற்றிய கவலை காணப்படும்.

இன்று காதலின் அன்பும் வனப்பும் குறைந்து காணப்படும். உங்கள் அன்பை முறையாக வெளிப்படுத்த இயலாது.

பணப்புழக்கம் சுமாராக இருக்கும். இன்று அதிக செலவுகளை சந்திக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி அல்லது இருமல் போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். நீங்கள் சில முக்கிய முடிவுகளை எடுக்கலாம். உங்கள் சமயோசித புத்தியால் இன்றைய நாளை உற்சாகமாக ஆக்குவீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து எதிர்பாராத அனுகூலங்களை நீங்கள் எதிர்பார்க்கலாம். இதனால் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் காணப்படும்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையாக பேசுவீர்கள். இதனால் இருவரும் நெருக்கமாவீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை மேம்படுத்த இயலும்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள். உங்களின் உடல் மற்றும் மன நிலை சிறப்பாக இருக்கும்.




உங்கள் நம்பிக்கையான அணுகுமுறையும் உங்களின் சிறந்த முயற்சியும் உங்களுக்கு இன்று அதிர்ஷ்டத்தை பெற்றுத் தர போதுமானதாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணியிடச் சூழல் சீராக யாருக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றி தரமான பணிகளை வழங்குவீர்கள்.

உங்கள் தந்தையின் நல்லாதரவு கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் பெற்றோருடன் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள்.

இன்று அதிக அளவில் பண வரவு காணப்படும். கடனுக்கான அனுமதி கிடைக்கப் பெற்று அதன் மூலம் பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் எந்த செயலையும் ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து செய்ய வேண்டும். இசை கேட்பது அல்லது வேறு பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் உங்கள் மனதை ஈடுபடுத்துங்கள்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் விரும்பத்தகாத தருணங்களை எதிர் கொள்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையற்ற விஷயங்களுக்காக பணம் சிலவு செய்ய வேண்டியிருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.01.2024




பல சௌகரியங்கள் காணப்பட்ட போதிலும் நீங்கள் பதட்டமாக உணர்வீர்கள். இதனை சமாளிக்க நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். இன்று அமைதியின்மை உணர்வை தவிர்க்க வேண்டியது அவசியம்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்காது.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. இந்த நேரத்தில் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பும் உள்ளது.




இன்று உங்கள் செயல்களில் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அனைத்தும் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். அமைதியின்மை உணர்வு உங்களை பாதிக்கும்.

நீங்கள் பணிகளை திறமையாக கையாள இயலாது. சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படலாம். அவர்களுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

இன்று உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதம் ஏற்படலாம். உங்கள் துணையை சமாதானப்படுத்தி நல்லுறவை ஏற்படுத்தி மகிழுங்கள்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. நிதி விஷயங்களில் கூடுதல் சுமைகள் காணப்படும். இது உங்களுக்கு சிறிது கவலை அளிக்கும்.

இன்று உங்களுக்கு பல் வலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வாய்ப்புகள் அதிகம் கிடைக்கும் நாள். அனுசரித்து போகும் அணுகுமுறை மூலம் இன்று செயல்களை எளிதாக மேற்கொள்ளலாம். இன்று உங்களிடம் தைரியம் நிறைந்து காணப்படும்.

நீங்கள் கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பணி சம்பந்தமான குறுகிய பயணம் மேற்கொள்ள நேரும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று நிதி வளர்ச்சி சீராக இருக்கும். உங்கள் பணத்தை சேமிப்பதன் மூலம் பணத்தை பாதுகாப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திடமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் சௌகரியங்கள் மற்றும் மகிழ்ச்சியை அதிகரிக்கும் விருப்பங்கள் உங்களிடம் காணப்படும். சில முக்கிய முடிவுகளை எடுக்க நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும்.

பணியிடத்தில் கூடுதல் பணிகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பொறுப்புகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

காதலில் அமைதியின்மை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளத் தயங்குவீர்கள்.

வீடு கட்டுதல் அல்லது புனர் நிர்மாணம் செய்வதற்கு பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் கூடுதல் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இது பயனுள்ள முதலீடாக இருக்கும்.










# பல லட்சம் ரூபா பெறுமதி சங்குகளுடன் மன்னார் எருக்கலம்பிட்டியில் மூவர் கைது





**(மன்னார் நிருபர்)**

மன்னார் கடற்படைக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருடன் இணைந்து எருக்கலம் பிட்டிஒ பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது அனுமதி அளிக்கப்பட்ட அளவை விட அதிகமாக சிறிய அளவிலான சங்குகளை உடைமையில் வைத்திருந்த பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் கடற்படையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது எருக்கலம் பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அனுமதி வழங்கப்பட்ட அளவை விட அதிக அளவில் சங்குகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையுடன் அனுமதி வழங்கப்பட்ட அளவை விட சிறிய அளவிலான சங்குளை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

களஞ்சியசாலையில் 20 ஆயிரம் சங்குகளே களஞ்சியப்படுத்த அனுமதி காணப்பட்ட நிலையில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட் சங்குகளும் வளர்ச்சி நிலை அடையாத சங்குகளும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததன் அடிப்படையில் வீட்டின் உரிமையாளர் மற்றும் பணியாளர்கள் இருவர் உள்ளடங்கலாக மூவர் கைது செய்யப்பட்டனர்.

களஞ்சியசாலையில் இருந்து 14,143 சங்குகள், 16 கிலோ கிராம் காய்ந்த அட்டைகள், 700 உயிர் அட்டைகளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளுக்காக சான்றுப் பொருட்களை மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

மேலதிக விசாரணையின் பின்னர் சங்கு,அட்டைகளுடன் சந்தேக நபர்கள் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது






# மட்டு. பண்ணையாளர்களுக்கு நீதி கோரி நேற்று நல்லூரிலும் கவனவீர்ப்பு நிகழ்வு!

மட்டக்களப்பு பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு நீதி கோரி நேற்றையதினம் யாழ்ப்பாணத்திலும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கு முன்பாக தமிழர் ஒருங்கிணைந்த கட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்த கவன வீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், சைவ மகா சபையினர், மத தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களால் நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபொரும் கவன வீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.
















# தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் தேர்தல் 343 பொதுக்குழு உறுப்பினர்கள் வாக்களிப்பர்

(நடராசா லோகதயாளன்)

தமிழ் அரசுக் கட்சியின் அடுத்த தலைவராக யார் வரவேண்டும் என்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியினரையும் அதன் தொண்டர்களையும் விடவும் மாற்றுத் தரப்புகளில் இருப்போரே அதிக அக்கறையும் ஆலோசனையும் – இதனை அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிற்கு ஒப்பாகக் கருதி – கூறுகின்றனர்.

தமிழ் அரசுக் கட்சிக்கான தலைவர் 1952 ஆம் ஆண்டின் முதலாவது தேசிய மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டமை முதல் இப்போது கட்சியில் தலைவருக்காக முன்மொழியப்படுபவர்கள் வரையில் ஒருவர் தலைவராக தேர்வு செய்யப்படுவார். எதிர்வரும் ஜனவரி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற 16 மாநாடுகளிலும் தலைவர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டாலும் செயலாளர் பதவிக்கு மட்டும் இருதடவை போட்டி நிலை ஏற்படுவதற்கான ஏதுநிலைகள் உருவாகி, அது கட்சியின் மூத்த தலைவர்களின் தலையீட்டால் சுமுகமாகத் தீர்க்கப்பட்ட வரலாறு உண்டு.

கட்சியின் தலைவராக ஒருவரது பெயர மட்டும் முன்மொழியப்பட்டால் அவரும் அல்லது ஒன்றிற்கும் மேற்பட்டவர்கள் முன்மொழியப்பட்டால் பொதுச் சபை உறுப்பினர்கள் இரகசிய வாக்களிப்பு மூலம் வாக்களித்து தேர்வு முறையிலும் தலைவர் செய்யப்படுவர் என 62 வருடங்களின் முன்னர் – அதாவது 1961 ஆம் ஆண்டு எழுதப்பட்ட – தமிழ் அரசுக் கட்சியின் யாப்பிலேயே சொல்லப்பட்டுள்ளது.

இதற்கமைய இடம்பெறவுள்ள தமிழ் அரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்பட வேண்டிய தலைவரிற்காக மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பொதுச் சபை உறுப்பினர்கள் வாக்களித்தே தமது கட்சிக்கான தலைவரை தேர்வு செய்யவுள்ளனர்.

தமிழ் அரசுக் கட்சிக்கு 1966இல் உடுவிலில் இடம்பெற்ற மாநாட்டின் போது க.பொ.இரத்தினம் செயலாளராக வர விரும்பி அந்த முயற்சியில் ஈடுபட்டார். அப்போது தந்தை செல்வாவின் தலையிட்டினால் அமிர்தலிங்கம் செயலாளரானார்.

இம்முறை தலைவர் தேர்விற்கு வாக்களிப்பதற்கு பொதுக்குழுவில் மொத்தம் 343 பேர் தகுதி உடையவர்களாகவே காணப்படுகின்றனர். ஜனவரி 21 ஆம் திகதி திருகோணமலையில் வாக்களிப்பு இடம் பெறுகின்றது.

17 ஆவது தேசிய மாநாடு ஆரம்பமாகும் தினமான ஜனவரி 27 ஆம் திகதி தற்போதைய தலைவர் புதிய தலைவரின் பெயரை உத்தியோக பூர்வமாக அறிவிப்பார்.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர் பிரதேச செயலக பிரிவுகள் ரீதியில் அமைக்கப்படும் கட்சியின் கிளைகள் ஒவ்வொன்றிலும் இருந்து தலா 05 பேரும், கொழும்புக் கிளைக்கு 5 பேருடன் (மொத்தம் 57 கிளைகள் X ஐந்து = 285 உறுப்பினர்கள்) மற்றும் தற்போதைய மத்திய செயற்குழுவில் இருக்கும் 43 பேருடன் மேலதிகமாக தலைவரால் (தற்போதைய) பரிந்துரைக்கப்படும் 15 பேரும் என்ற அடிப்படையிலேயே இந்த 343 பேரும் தேர்வாகியுள்ளனர்.

மாவட்ட ரீதியில் யாழில் 15 கிளைகள், மட்டக்களப்பில் 10 கிளைகள், அம்பாறையில் 07 கிளைகள்,

திருகோணமலையில் 06 கிளைகள், வவுனியாவில் 04 கிளைகள், முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் தலா 05 கிளைகள், கிளிநொச்சியில் 4 கிளைகள் ஆகியவற்றுடன் கொழும்பில் ஒரு கிளையும் என்ற அடிப்படையிலேயே இந்த 57 கிளைகள் உள்ளன.

தற்போதைய தலைவர் நியமிக்கும் 15 பேரில் பத்து இடங்கள் திருகோணமலை மற்றும் கொழும்புக் கிளைகளுக்கான மேலதிக இடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன எனத் தெரிகிறது. மிகுதி ஐந்தும் எந்த மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. அந்த ஐந்து உறுப்பினர்கள் தவிர்ந்து வாக்களிக்கும் தகுதியுடைய மிகுதி 338 உறுப்பினர்களும் மாவட்ட ரீதியாக எண்ணிக்கை வருமாறு:-

இதற்கமைய

- ❑ யாழ்ப்பாணம் – 94
- ❑ மட்டக்களப்பு – 60
- ❑ அம்பாறை – 38
- ❑ திருகோணமலை – 37
- ❑ வவுனியா – 23,
- ❑ கிளிநொச்சி. – 23
- ❑ மன்னார் – 27
- ❑ முல்லைத்தீவு – 28
- ❑ கொழும்பு – 08

வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கூடும் கூட்டத்தை தொடர்ந்து தேர்விற்கான வாக்களிப்பும் இடம்பெற்று மாலை 2 மணியளவில் முடிவு அறியப்படும்.



# தைப்பொங்கலை முன்னிட்டு சிறப்புற நடைபெற்ற வடமராட்சி கிழக்கின் மூன்றாவது பட்டத்திருவிழா



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு, 'டான்' ரீவி அனுசரணையில் வடமராட்சி கிழக்கின் மூன்றாவது பட்டத்திருவிழா, கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது.











